**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி**: 09.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 30/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-6 |
| **சாட்சியின் பெயர்** | : | நாகசெல்வம் |
| **தந்தை பெயர்** | : | கண்ணையன் |
| **கிராமம்** | : | இலையூர் |
| **தாலுக்கா** | : | குடவாசல் |
| **தொழில்** | : | கூலி வேலை |
| **வயது** | : | 47 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா-1 நாகப்பன் தெரியும். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன். எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர். எதிரி பிள்ளை சமூகத்தை சேர்ந்தவர். அ.சா-1 நாகப்பன் கொடுத்த புகாரின் பேரில் ஆஜர் எதிரிக்கும் அ.சா-1-க்கும் நடந்த சண்டை தொடர்பாக போலீசார் என்னை 05.02.2021 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு காவனூர் நாகப்பன் வீட்டிற்கு குடவாசல் போலீசார் வந்தார்கள். சம்பவ இடத்தை வரைபடம் வரைந்தார்கள். மேலும் என்னிடம் ஒரு சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நானும் பார்த்தீபன் என்பரும் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். சம்பவ இடத்தில் போலீசார் தயார் செய்த மேற்படி பார்வை மகஜரில்

கையொப்பம் செய்து கொடுத்தேன். மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கு சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தாரா என்றால் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் விசாரணைக்காக என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தார்களா என்றால் அழைத்தார்கள் நான் போகவில்லை. நான் கையெழுத்து செய்துள்ள அ.சா.ஆ-2 ல் என்ன எழுதி இருந்தது என்று தெரியாது என்று சொன்னால் ஆமாம் தெரியாது. நான் காவல் நிலையம் சென்று அங்கு வைத்து அ.சா.ஆ-2 ஆன மகஜரில் கையொப்பம் செய்து விட்டு தற்போது போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.09 17:22:20 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.